முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1337

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.05.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சூட்சும மகா சக்தியே
ஞானிகளின் பலம் கொண்ட யோகசக்தியே
தானதர்மத்தால் அகிலத்தையே
தனிப்பெரும் கருணைவடிவாக மாற்ற வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
செப்பிடுவேன் சோபகிருது விடை திங்கள் தன்னில்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 14 ம் நாள், 28.05.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. தன்னிலே அரங்கன் சக்தியே
தரணியை காக்கும் மகாசக்தியாகும்
அன்னதானமெனும் அரங்கன் சேவையே
அகிலத்தை மாற்றும் உயர்மார்க்கமாகும்
4. மார்க்கம் தனை வரவேற்று உலகோர்
மாதர்மம் ஆக்கி எங்கும் சேவையாற்றிட
பார்த்துரைக்க உலகமெங்கும் மாற்றம்
பரோபகார வடிவிலே நடந்தேறக்கூடும்
5. கூடுமப்பா மக்களை நேசிக்கின்ற
குரு அரங்கன் சக்தியாக எங்கும் தயவு
நாடெங்கிலும் பரவி மக்களிடை தெளிவு
ஞானவழியாக மாற்றம் காணும்
6. காணவே அரங்கன் தொடர்பு கூட்டி
கலி யுகத்தில் மக்கள்
ஞானம் பயின்றுவந்தால் போதும்
ஞான ஆட்சி தானாக உலகில் நடந்தேறும்
7. ஆறுதலாய் அரங்கன் தர்மத்தை
அனைவரும் பின்பற்றி செய்துவர
மாறுதல் தர்மவழியே நடக்கும்
மொழிந்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–